IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 76 /2020
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலு | Caste | : - |
| Father Name | : ஆறுமுகம் | Calling | : - |
| Village | : பழைய தொண்டான்துளசி கிராமம் | Religion | : - |
| Town | : கே.வி.குப்பம் தாலுக்கா | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12 day of October, 2023.

Chief Continuation

1. நான் இந்த வழக்கின் வாதி. ஏற்கனவே எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். தற்பொழுது என்னுடைய கூடுதல் பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். 28.2.2000 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திர எண்.788/2000-ன் அசல் வா.சா.ஆ1 ஆகும். தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை நிலஉரிமை விவர வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தொண்டான்துளசி கிராம சர்வே எண்.91/41 என் மனைவி பெயரில் வழங்கப்பட்ட கணினி பட்டா எண்.11-ன் நகல் வா.சா.ஆ2 ஆகும்.

2. தமிழ்நாடு அரசு பதிவுத்துறை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட 3.9.2001 முதல் 28.9.2020 வரையிலான காலகட்டத்திற்குரிய வழக்கு சொத்து தொடர்பான வில்லங்கசான்றிதழின் நகல் வா.சா.ஆ3 ஆகும். என் பெரியலான மின்கட்டண அட்டையின் அசல் வா.சா.ஆ4 ஆகும். 4.9.2022 தேதியிட்ட மின்கட்டண ரசீதின் அசல் வா.சா.ஆ5 ஆகும். 22.12.2000 தேதியிட்ட என் பெயரிலான வீட்டுவரி ரசீதின் அசல் வா.சா.ஆ6 ஆகும். 8.1.2000 தேதியிலான என் பெயரிலான வீட்டுவரி ரசீதின் அசல் வா.சா.ஆ7 ஆகும்.

(பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ2 முதல் 7 வரையிலான ஆவணங்கள் தொடர்பாக வழக்குரையில் எங்கேயுமே வாதுரைக்கப்படவில்லை என்பதால் ஆட்சேபணை செய்யப்படுகிறது). தாவாபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> - 1,2,6,7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.